தேதி: 10.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.44/2019

வழக்கு சாட்சி எண். PW 6

| | |
|---|---|
| பெயர்: சகாதேவன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1 முதல் 7 வரை ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது புளியங்குளத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.3 யைத்தெரியும். எதிரிகளைத்தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். பட்டியல் சாட்சி 2 யைத் தெரியும்.

2. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு இரவு 8.00 மணி அளவில் எதிரிகள் மது அருந்திவிட்டு பட்டியல் சாட்சி 2 இசக்கி முத்துவின் வீட்டிற்கு சென்று அவரை கையால் அடித்தார்கள்.

3. எதிரிகள் தேவடியா குதி மவனே என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள். உன்னை அடித்தால் யார் கேட்பார்கள் என்று மிரட்டினார்கள். காயம்பட்ட பட்டியல் சாட்சி 2 யை அருகில் இருந்தவர்கள் மருத்துவமனயில் சேர்த்தார்கள்.

4. பட்டியல் சாட்சி 2 க்கு முதுகிலும், கையிலும் காயம் ஏற்பட்டு இருந்தது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

5. இந்த வழக்கில் புகார்தாரின் பெயர் தெரியுமா என்றால் தெரியும் அவர் பெயர் அபிமன்னன் ஆகும். அபிமன்னன் தான் புகார் கொடுத்தார் என்ற விபரத்தை நான் காவல் நிலையத்தில் சொன்னேனா என்றால் இல்லை. போலீசாரே விசாரித்து எழுதிக்கொண்டார்கள்.

6. மற்ற புகார்தாரர் கூறியதை கேட்டு கொண்டு நான் எதுவும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழகது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இரண்டு நாட்களுக்குள் முன்னால் காவலர் சம்மன் கொடுக்க வந்த போது தான் தெரியும்.

மறு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 10.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.44/2019

வழக்கு சாட்சி எண். PW 7

பெயர்: முருகன் ஜாதி :

தந்தை பெயர் : தொழில்:

கிராமம்: சமயம்:

தாலுகா: வயது:

( எதிரிகள் 1 முதல் 7 வரை ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது புளியங்குளத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.3 யைத்தெரியும். எதிரிகளைத்தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். பட்டியல் சாட்சி 2 யைத் தெரியும்.

2. கடந்த 2018 ம் ஆண்டு இரவு 7.00 மணி அளவில் எதிரிகள் மது அருந்திவிட்டு பட்டியல் சாட்சி 2 இசக்கி முத்துவின் வீட்டிற்கு சென்று அவரை கையால் அடித்தார்கள்.

3. எதிரிகள் தேவடியா குதி மவனே என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள். 1 வது எதிரியின் தம்பி கன்னன் என்பவரை காணவில்லை என்றும், நீ தான் ஏதாவது செய்திருப்பாய் என்று கூறி பட்டியல் சாட்சி 2 யை அடித்தார்கள். சம்பவத்தை பார்த்து நான் விலக்கிவிட்டேன். காயம்பட்ட பட்டியல் சாட்சி 2 யை அருகில் இருந்தவர்கள் மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

4. இந்த வழக்கின் புகார்தாரர் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அவர் பெயர் இசக்கி முத்து ஆகும். நான் சம்பவத்தை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சம்பவத்தை நேரில் பார்த்த விபரம் மற்றும் புகார் கொடுத்த விபரம் என்ற விபரத்தை நான் சொன்னேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்க வில்லை. புகார் கொடுக்க சென்ற போது தான் போலீசாரை பார்த்தோம்.

5. அதன் பின்பு 2 நாட்களுக்கு பின்பு தான் போலீசாரை பார்த்தோம். கையெழுத்து எதுவும் போட்டுக்கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.